
அலாடீனுடைய மந்திர விளக்கு



தமிழாக்கம்
அனுமிதா

அலாடீனுடைய மந்திர விளக்கு





பல காலங்களுக்கு முன்பு அலாடீன் என்றழைக்கப்பட்ட சோம்பேறி சிறுவன் ஒருவன் இருந்தான். குடும்பத் தொழிலைத் தனியாக நடத்த வேண்டியிருந்த அவனது அப்பா கவலைப்பட்டு இறக்க, தாயும் செய்வதறியாமல் மனம் தளர்ந்தாள்.

எப்போதும் போல் அன்றும் அலாடீன் குறிக்கோள் இல்லாமல் நேரத்தை வீணாக்கிக் கொண்டிருந்தான்.

அலாடீன்! நான் தான், சிற்றப்பா அபான்ஸர், எப்பவோ காணாமற் போன, உன்னுடைய அப்பாவின் தம்பி”.

அலாடீன் வேலை இல்லாமல் இருக்கிறான் என்றூ தெரிய வந்ததும் ஆடம்பரமான கடை ஒன்றை வாங்கி தந்தார்.



அன்று மாலை புதிதாக வந்த சிற்றப்பா கூப்பிடாமலேயே தானெ சாப்பிட வந்தார்.



அலாடீனும், அவன் தாயாரும் மிக்க மகிழ்ச்சி அடைந்தனர்.
உண்மையிலேயே, அபான்ஸர், ஒரு தீய மந்திரவாதி என்று சந்தேகப்படவில்லை.

அடுத்த நாள் அபான்ஸர் அலாடீனை, உலாவுவதற்கு, நகரத்திற்கு வெளியே நீண்ட தூரம் அழைத்துச் சென்றார்





கடைசியில், “வந்துவிட்டோம்”, என்று கூறிய அவனுடைய சித்தப்பா நெருப்பு பற்றவைத்து அதன் மீது சிறிது தூளைத் தூவினார்.

கல்லில் செய்யப்பட்ட பொறி கதவு ஒன்று புல்லில் தோன்றியது. தன்னுடைய சித்தப்பாவிற்கு மந்திரம் தெரியுமா என்று அலாடீன் ஆச்சரியப்பட்டான்.

"இந்த கல்லின் கீழ் பல பொக்கிஷங்கள் உள்ளன, ஆனால் எனக்கு ஒன்றே ஒன்று மட்டுமே வேண்டும்," என்ற அபான்ஸர் "விளக்கை எடுத்துக் கொண்டு வா” என்று சொன்னார்.

“ஆனால் சிற்றாப்பா..”





மேலும் அலாடீனை படிகட்டுகளில் தள்ளிவிட்டு, “இந்த மோதிரத்தை வைத்துகொள், உனக்கு சமயத்தில் உதவும்”, என்று சொன்னார். தங்கம் இருந்த நான்கு அறைகளைக் கடந்து, பழ தோட்டத்திற்குள் நுழைந்தான். அங்கிருந்த பழங்கள் கண்ணாடி துண்டுகள் போல் பளபளத்தன..



விளக்கைப் பார்த்ததும் ஆதை தன் பாக்கெட்டில் திணித்துக் கொண்டான். கூடவே கையளவு அழகான பழங்களையும் எடுத்துக் கொண்டான்

“விளக்கை என்னிடம் கொடு”, நுழைவாயிலிருந்து அபான்ஸர் கத்தினார். ஆனால் அதை தேடி எடுக்க அலாடினுக்கு அதிக நேரம் ஆகிவிட்டது.



அலாடீன் பதிலளிக்கும் முன்பே பெரியதாக சப்தம் கேட்டதும் அங்கு கும்மிருட்டாகிவிட்டது.

இரு ஜீனிகள்



அலாடீன் சிக்கிக்கொண்டான். அங்கு ஒரே குளிராகவும், இருட்டாகவும் இருந்ததால் மிகவும் பயமாக இருந்தது. சூடாக இருக்க தன் இரு கைகளயும் தேய்த்துக் கொண்டான்.

திடீரென ஒரு ராக்ஷச உருவம் அவன் முன் தோன்றியது.

“நான் உனக்கு என்ன செய்ய வேண்டும் என்று ஆணை இடு” என்றது.



என்னை இங்கிருந்து வெளியே அழைத்துப் போ”, அலாடீன் கத்தி சொன்னான். ஒரு நொடியில் தான் வீட்டிற்கு அருகில், புல்வெளியில் இருபப்தை உணர்ந்தான்.



என்ன நடந்தது என்று தனது தாயிடம் சொல்ல தன் வீட்டிற்குள் விரைந்தான்.

“அபான்ஸர் என் சிற்றப்பாவாக இருக்கவே முடியாது. அவர் மந்திர காரியங்களைச் செய்து என்னைக் கொல்ல முயன்றார்!" அலாடீன் அழுதான்.



"நீயும், உன் கதைகளும்", என்று சொன்ன அவன் தாயார், "இப்போது, இரவு உணவிற்கு உனக்கு என்ன வேண்டும்? சாப்பிட எதாவது வாங்க இந்த பழைய விளக்கை விற்கலாமே”, என்று கேட்டார்..

உடனே விளக்கை மெருகூட்டத் தொடங்க, பூதாகராமான ஒரு உருவம் வெளியே மிதந்ததைப் பார்த்து பயத்தில் பின் வாங்கினார்.



"எனக்கு ரொம்ப பசிக்கிறது, ஏதாவது உணவு இருக்கிறதா?"அலாடீன் கேட்டான். "ஒரு நொடியில் இரு வெள்ளித் தட்டுகளில் பெரிய விருந்தே வந்தது.

உணவும், மதுபானமும் ஒரு வாரம் சாப்பிட போதுமானதாக இருந்தது. பிறகு அலாடீன் இன்னும் சில வெள்ளி தட்டுகளை விற்றான்.



ஒரு நாள், தட்டுகளை விற்கும் சந்தையில் இருந்த அலாடீன் அங்கு பளபளக்கும் நகைகளைப் கண்டதும், "இவை நான் குகையிருந்து எடுத்த கண்ணாடிப் பழங்களைப் போலவே இருக்கின்றனவே" என்று ஆச்சரியப்பட்டான்



· வாழ்க்கை சௌக்கியமாகப் போய்க் கொண்டிருந்தது. அலாடீன் அல்லது அவனுடைய அம்மாவிற்கு உணவு வேண்டிய போதெல்லாம், அவன் விளக்கை தேய்த்து ஜீனியைக் கேட்பான்.

உடனே நேராக வீட்டிற்கு ஓடி, குகையில் எடுத்த நகைகளை மறைத்து வைத்தான்.



சுல்தானின் பெண்.



ஒரு நாள் அதிகாலையில் சுல்தானிடமிருந்து., "இளவரசி பத்ர்-அல்-புதூர் இன்று பொது குளியல் செய்வார். எல்லோரும் வீட்டிலேயே இருக்க வேண்டும்" என்ற கட்டளை வந்தது.

இதற்கு ஏன் இத்தனை தடபுடல் என்று ஆச்சரியப்பட்ட அலாடீன் இளவரசியை நேராக பார்க்க, குளியல் அறைகள் ஒன்றில் ஒளிந் துக் கொண்டான்.



அவள் முக்காடைத் தூக்கிய போது, அவன் கிட்டதட்ட மயக்கம் போட்டுவிட்டான். இன்றுவரை அவன் பார்த்த ஒரே பெண் முகம் அவரது தாயாருடையது. ஆனால் இளவரசி பத்ர மிக அழகாக இருந்தாள்.

கண்களில் மயக்கமும், அசட்டு சிரிப்புடனும், அலாடீன் குதித்துக் கொண்டு வீட்டிற்கு வந்தான்.

உற்சாகத்துடன் அவனுடைய அம்மா ”என்ன நடந்தது?” என்று கேட்டார்.



அவனுடைய தாயார் சிரித்த போதிலும், அலாடீன் திடமாக இருந்தான்.

அவளை திருமணம் செய்துக் கொள்ளவில்லை என்றால் இறந்துவிடுவேன் என்றான் அலாடீன்.

சுல்தானிடம் சென்று, கல்யாணம் பற்றி பேச சொன்னான். மேலும், "இந்த நகைகளை அவருக்கு பரிசாக எடுத்துச் செல்லுங்கள்” என்று கூறினான்;



"சுல்தான் ஒருபோதும் இதை ஒப்புக்கொள்ள மாட்டார்!", என்று அழுது கொண்டே அவன் தாயார் கூறினாள். ஆனால் தன் மகனைப்பற்றி மிகவும் கவலைப்பட்டதால் அவன் கேட்டபடியே செய்தாள்.

சுல்தான் இருந்த இடம் ஒரு பெரிய அரண்மனை. அலாடீன் அம்மா முதலில் போன போது சுல்தான் அவரை கண்ணெடுத்துக் கூட பார்க்கவில்லை.. ஆனால் அவர் விடாமல் திரும்ப-திரும்ப போனாள். கடைசியில் ஒரு நாள் அவருடன் பேசினார்.



தன்னுடடைய பையன் இளவரசியைக் காதலிப்பதாகச் சொன்னார்.
“நாங்கள் உங்கள் அந்தஸ்த்துக்கு இணையாக மாட்டோம்”, அலாடீன் அம்மா முணுமுணுத்தார். “ஆனால் இந்த சிறிய பரிசை ஏற்றுக் கொள்ள வேண்டும்” என்று கொடுத்தார்.



“ஹ்ம்ம் ... பத்ருக்கு ஒரு கணவன் தேவை ...", சுல்தான் கூறினார்.

“ஆனால், என் மகன் அவளை திருமணம் செய்துக் கொள்ளலாம் என்று நீங்கள் சொன்னீர்களே”, சுல்தான் அருகிலிருந்த ஒல்லியான மனிதன் சொன்னார்

அந்த மனிதர் சக்தி வாய்ந்த சுபேதார்; மற்றும் மந்திரியும் கூட. அவர் சுல்தானின் காதில் ஏதோ இரகசியம் சொல்லவும், சுல்தான் அலாடீன் தாயாரை நோக்கி

“இன்னும் மூன்றே மாதங்களில், உன்னுடைய மகனுக்கும், என் மகளுக்கும் திருமணம் நடக்கும்” என்றார்.



தவறான கணவன்



இரண்டு மாதங்களுக்குப் பிறகு, அலாடினின் தாய் நகரத்திற்குச் சென்றார். யாவரும் ஒரு அரச குடடும்பத்தின் திருமணத்தைப் பற்றியே பேசிக் கொண்டிருந்தார்கள்.

"இன்று இளவரசிக்கு மந்திரியின் மகனுடன் திருமணம் நடக்கவிருக்கிறது”, என்று கட்டியக்காரன் பறைசாற்றினான்.

இந்த வருத்தமான செய்தியை சொல்ல அலாடினின் தாய், வீட்டிற்கு விரைந்தார். விளக்கின் ஜீனியின் நினைவு வரும் வரை அலாடீன் மிகவும் வருத்தப்பட்டான்.

அன்றிரவு புதிய தம்பதியருக்கு இடஞ்சல் செய்ய வேண்டும் என்று அவன் ஜீனிக்கு உத்திரவிட்டான்.



நள்ளிரவில் ஜீனி பத்ரை அலாடினின் வீட்டிற்கு அழைத்து வந்து, மந்திரி மகனை குளிர்ந்த இரவில் தெருவில் விட்டுவிட்டது.



நீங்கள் என்னுடன் பாதுகாப்பாக இருப்பீர்கள்" என்று அலாடீன் மென்மையாகக் கூறினான்.

மறு நாள், விடிவதற்கு முன்பே ஜீனி, பத்ர் மற்றும் மந்திரியின் மகனை, திருப்பி அவரவர்கள் இடத்திற்கே எடுத்துக் கொண்டு போய் விட்டுவிட்டது.

காலை சிற்றுன்ன்டியின் போது " ஏன் ஒரு மாதிரி இருக்கிறாய்"? என்று ராஜகுமாரியின் பெற்றோர்கள் கேட்டார்கள்.



ராஜகுமாரி பத்ர் மௌனமாக இருந்தாள். அன்று மாலை, மந்திரியின் மகன் இரவில் அமைதியாக தூங்க வேண்டும் என்று வேண்டிக் கொண்டான்; ஆனல் ஜீனி நடு இரவில் திரும்பி வந்தது.

இரவில் மறுபடியும் குளிரில் தெருவில் விடப்பட்ட மந்திரி குமரனுக்குப் போதும் என்றாகிவிட்டது.

"சுல்தான், என்னை மன்னித்துக் கொள்ளுங்கள். உங்களுடைய மகள் சிறந்தவள் தான்; ஆனால் இந்த பயங்கரம்மான கனவுகளை என்னால் சமாளிக்க முடியாது" என்றான்.




அப்படியா, சரிபட்டு வராது என்றால் பரவாயில்லை", என்ற சுல்தான் திருமணத்தை ரத்து செய்துவிட்டான்.

அலாடீனின் திருமணம்

நாற்பது தட்டுகள் நிறைந்த நகைகளைப் பட்டாடைகள் அணிந்த எண்பது பேர்கள் எடுத்து வந்தால் தான் அலாடீன் பத்ரியைத் திருமணம் செய்துக்கொள்ள முடியும்", என்று கூறினார்


சீக்கிரமே, அலாடினின் அம்மா திரும்பி சுல்தானைப் பார்க்க சென்றார்.

"எனக்கு அவனை மறுபடியும் நகைகளை அனுப்பச் சொல்லுங்கள்", எனறார்





ஜீனி இதை மிக எளிதாக நிறைவேற்றியது. ஒரு மணி நேரத்திற்ககுள் நீண்ட ஊர்வலம் வந்து கொண்டிருந்தது.



ஆனால் முதலில், அலாடீன் பத்ருக்கு ஒரு வீட்டை கட்ட விரும்பினான். அந்த அரண்மனை எப்படி இருக்க வேண்டும் என்பதை ஜீனிக்கு விவரமாக சொல்ல. ஜீனி அதை ஒரே இரவில் கட்டி முடித்தது..




சுல்தானால் இதை நம்பவே முடியவில்லை.

'உங்கள் மகனிடம் அவர் இப்போதே என் மகளை திருமணம் செய்து கொள்ளலாம் என்று சொல்லுங்கள்! "என்று அவர் அலாடீனின் தாயிடம் கூறினார்.

அலாடீன் தனது மிக சிறந்த ஆடைகளை அணிந்து சுல்தானின் அரண்மனைக்குச் சென்றான். திருமண நாள் இசையும், நடனமுமாக தொடங்கி, விருந்து மற்றும் பட்டாசுகளுடன் முடிந்தது.

அன்று மாலை, தனது புதிய வீட்டிற்குச் சென்ற பத்ர் மகிழ்ச்சியடைந்தாள். அவள் பார்த்தவர்களிலேயே அலாடீன் தான் மிக அழகான மனிதன்; அவர்களின் அரண்மனை உலகிலேயே மிகச் சிறந்ததாக இருந்தது.



அபான்ஸர் திரும்புகிறார்



பாலைவனத்தில், வெகு தொலைவில், அபான்ஸர் அலாடினின் நல்ல அதிர்ஷ்டத்தைக் கேள்விபட்டார்.

“அவன் விளக்குடன் தப்பித்திருக்க வேண்டும்”, உறும்பினார்.

விளக்கைத் தேடுவதக்கு அவர் அலாடினின் நகரத்திற்குச் சென்றார்.



பத்ர் தனது அரண்மனையிலிருந்து அந்த கூச்சலைக் கேட்டாள்.

"இது ஒரு நல்ல வாய்ப்பு”, என்று நினைத்த அவள், அவனுக்குக் கொடுக்க ஒரு பழைய விளக்கைக் கண்டுபிடித்தாள்.

சந்தடியில்லாத ஒரு மூலைக்குச் சென்று, அவர் விளக்கைத் தேய்த்தார்.

நான் உங்களுக்கு என்ன செய்ய வேண்டும்”, ஜீனி கேட்டது



"என்னுடன் அரண்மனையையும் இளவரசியையும் பாலைவனத்தின் நடுவில் அழைத்துப் போக வேண்டும்”, என்றார் அபான்ஸர்.

"

அன்று காலை, சுல்தான் தனது ஜன்னலிலிருந்து பார்த்ததும், கிட்டத்தட்ட மயக்கம் அடைந்தார்.

"என் மகளின் அரண்மனையைக் காணவில்லையே” என்றார்.



பிறகு, அலாடீன் தன்னை ஏமாற்றிவிட்டதாக எண்ணி அவனைக் கைது செய்ய சில வீரர்களை அனுப்பினார்.

வேட்டையாடிவிட்டு வந்த அலாடீன் அரண்மனை இருந்த இடத்தில் படையினர்கள் மட்டும் இருப்பதைக் கண்டு சுல்தான் போலவே அவனும் ஆச்சரியப்ப்ட்டான்.

"கவலை பட வேண்டாம்; நான் அவளை கண்டுபிடிப்பேன்" என்று அவன் ஊறுதியுடன் சொன்னான்



என்ன செய்வது என்று திகைத்துப் போய் அலாடீன் கைகளை பிசையவும் மோதிர ஜீனி தோண்றியது.!

"ஓ! நான் உன்னை மறந்தே போய்விட்டேன்" என்ற அலாடீன், "எனக்கு ஒரு உதவி செய்ய வேண்டும்" என்றான்.



"என்னால் பத்ரை இங்கு கொண்டு வரமுடியாது ஆனால் உங்களை அவளிடம் அழைத்துச் செல்ல முடியும்", என்று அது பதிலளித்தது.

சில விநாடிகளில் அலாடீன் பத்ரின் ஜன்னலுக்கு அடியில் இருந்தான்.



அபான்ஸர் தன்னை மறந்து பத்ரைப் பார்த்துக் கொண்டிருந்ததில் தனது பானத்தில் அவள் விஷம் கலந்ததைக் கவனிக்கவில்லை. சிறிதளவு குடித்ததுமே அவன் தரையில் விழுந்து இறந்தான்.



"கவலைப்படாதே!" அலாடீன் கீழேயிருந்து சொன்னான். " நான் ஒரு திட்டம் வைத்திருக்கிறேன். இன்றிரவு அவனுடன் சாப்பிட ஒப்புக்கொள்; நான் கொஞ்சம் விஷம் கொண்டு வந்து திருட்டுத்தனமாகப் பதுங்கி நுழைந்து விடுகிறேன். நீ அதை அவன் மதுவில் கலந்துவிடு”

அலாடீன் தனது அரண்மனையில் விளக்கைத் தேடி, பிறகு ஒரு வேண்டுகோளில், அவனும், பத்ரும் வீட்டிற்கு வந்து விட்டனர்.



தீய சகோதரர்



ஆனால், அவர்கள் இன்னும் அபாய எல்லைக்குள் தான் இருந்தார்கள். அபான்ஸருக்கு ஒரு தீய சகோதரர் இருந்தார்; அவர் பழிவாங்க விரும்பினார்.

அந்த சகோதரர், பாதிமா என்கிற ஒரு புனித பெண்ணாக ஆடை அணிந்து, மக்களைக் குணப்படுத்துவது போல் நடித்து, அலாடீன் அரண்மனைக்கு வெளியே நின்றார்.

பாதிமாவைப் பார்த்து அதிசியத்துடன் மிகவும் உற்சாகமாக பத்ர் அவளை உள்ளே அழைத்தாள்.



புராதன கதைளில் வரும் ஒரு பிரம்மாண்டமான பறவை ராக். அது மிகப் பெரிய முட்டைகள் போடும். பாதிமாவின் யோசனையை விரும்பிய பத்ர், அலாடீனிடம் கேட்டாள்

“பிரச்சனையில்லை”, என்ற அலாடீன், விளக்கு ஜீனியைக் கூப்பிட்டான்.



அதை தவிர எதுவேண்டுமானாலும் கேட்கலாம்” என்று அழுது கொண்டே சொன்ன ஜீனி, “நீங்கள் ராக் முட்டை கேட்டால் நான் உங்களைக் கொல்ல வேண்டியிருக்கும்”, என்று முடித்தது.

“ஆனால், இது உங்களுடைய யோசனை அல்ல என்று எனக்குத் தெரியும்," என்று அது கூறியது. "பாதிமா உண்மையில் மாறுவேடத்தில் வந்திருக்கும் அபனஸரின் சகோதரர். உங்களைக் கொல்ல வந்திருக்கிறார் என்றதும் அதிர்ச்சியடைந்த அலாடீன், வேகமாக சிந்திக்க வேண்டியிருந்தது.



தன் தலைவலியைக் குணப்படுத்தும்படி அலாடீன் பாதிமாவைக் கேட்க, அபனஸரின் தீய சகோதரர் அவனை நெருங்கவும் அலாடீன் தன் வாளை உருவி, கொன்றான்.



அவர்களைத் தொந்தரவு செய்ய தீய மனிதர்கள் ஒருவரும் இல்லாததால், அலாடீனும் பத்ரும் பாதுகாப்பாக இருந்தனர்.



காலப்போக்கில், அலாடீன் சுல்தானாகவும், அவனது தாயார் பாட்டியாகவும் ஆனார்கள். அவர்கள் விரும்பிய அனைத்தும் அவர்களிடம் இருந்தன. எனவே விளக்கு மற்றும் மோதிரம் ஒரு டிராயரில் பூட்டி வைக்கப்பட்டன. யாருக்குத் தெரியும், ஜீனிகள் இன்றும் இருக்கலாம்!

முற்றும்